மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின்
செயல்முறைகள், சென்னை – 06

ந.க.எண். 6400/ஊ4/2023 நாள். 02.03.2023

பொருள் : முதுகலை இயற்பியல் ஆசிரியர்களுக்கான உண்டு உறைவிட பயிற்சி – மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் அனைத்து மாவட்டத்தில் உள்ள முதுகலை பாட (இயற்பியல்) ஆசிரியர்களுக்கு உண்டு உறைவிட திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல் – அனைத்து மாவட்டங்களில் பணிபுரியும் இயற்பியல் பாட முதுகலை ஆசிரியர்கள் பங்குபெறுதல் சார்பாக இணைப்பில் உள்ள Google format அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்புதல் – அனுமதி மற்றும் ஆணை அளித்தல் – தொடர்பாக.

பார்வை : திரு.அ.ஆசீர் ஜீலியஸ், ஒருங்கிணைப்பாளர் அவர்களின் கடிதம் நாள் 01.03.2023.

-----

மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் பணிபுரியும் முதுகலை இயற்பியல் பாடத்தில் புதுமையான கற்பித்தல் முறைகள், சிறந்த மதிப்பீட்டு நுட்பங்கள் மற்றும் கற்பித்தலில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கான உத்திகள் உள்ளிட்ட இயற்பியல் பாட தொடர்பான பல்வேறு தலைப்புகளில் பல்வேறு கட்டங்களில் பயிற்சி நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இயற்பியல் பாடக்கருத்துகளில் விரிவுரைகள், அறிவியல் சோதனைகள், செயல்பாடுகள், பயிற்சி பட்டறைகள், களப்பயணங்கள் மற்றும் குழு விவாதங்கள் ஆகியவற்றின் மூலம், ஆழமாக சிந்தித்து செயல்படவும், இயற்பியல் பாடத்தை ஆசிரியர்கள் திறம்பட கற்பிக்க உதவும் வகையிலும், மாணவர்கள் எளிதாக புரிந்துகொள்ளும் வகையிலும், இந்த பயிற்சி பயனுள்ளதாக அமைய வேண்டியும், சிறந்த கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் திறமைவாய்ந்த மற்றும்

அனுபவம் வாய்ந்த கருத்தாளர்களிடமிருந்து கற்றுக் கொள்ளவும், மாநிலத்தின் அனைத்து பகுதிகளில் உள்ள இயற்பியல் தன்னார்வலர்களிடமிருந்து கருத்துக்களை பெற்றிடவும், மேற்படி கற்றல் கற்பித்தல் பணிகளை ஏப்ரல்–2023 முதல் தொடர்ச்சியாக இந்நிறுவனத்தின் மூலம் முதற்கட்டமாக இப்பயிற்சியினை உண்டு உறைவிட திறன் மேம்பாட்டு பயிற்சியாக நடத்திடவும் அறிவுறுத்தப்படுகிறது.

எனவே, அனைத்து மாவட்டங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் ஆர்வமுள்ள முதுகலை இயற்பியல் பாட ஆசிரியர்களை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள லிங்கை (https://docs.google.com/forms/d/e/1FAIpQLSdDRVn8wiT7NEKRuoh1g8GfLsRY4CugBhRtWw_ueqqRyxtfUg/viewform?usp=pp_url) கிளிக் செய்து பதிவு செய்யுமாறு அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் மற்றும் அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு: Link

இயக்குநர்

B.O
8/3/2023

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்.